IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI.

| O.S. 31/2005 | | | |
|---|---|---|---|
| Name: | அபிமன்யு | Religion: | இந்து |
| Father's Name: | குண்டியாக்கவுண்டர் | Caste: | |
| Village: | வெள்ளார்நாயக்கன்பாளையம் | Calling: | தனியார் நிறுவன மேலாளர் |
| Taluk: | எடப்பாடி | Age: | 62 |

Date: 18.6.2019 – PW –1

குறுக்கு விசாரணை- வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 10 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

தாவா சொத்தில் எத்தனை வீடு உள்ளது என்றால் பொதுவான ஒரே வீடுதான் உள்ளது. அதன் கதவு நெம்பர் என்னவென்றால் சரியாக தெரியாது. அந்த வீட்டில் தற்போது யாரும் குடியில்லை என்றால் என் சித்தப்பா வகையறாக்கள் உள்ளனர். அந்த வீட்டில் பாகம் கேட்டு மேற்படி சொத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம். மேற்படி வீட்டினை இந்த வழக்கில் சொத்து விபரத்தில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சின்ன வீடாக இருந்ததாலும் மதிப்பு குறைவாக இருந்ததாலும் அதை சேர்க்கவில்லை. மேற்படி சொத்தானது மதிப்பு குறைவானது என நான் சொல்வது தவறு என்றாலும் அதன் மதிப்பு கிட்டத்தக்க ரூ.5 லட்சம் இருக்கும் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தில் கிணறு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணற்றையும், இந்த வழக்கில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ச.எண்.308/3 ல் தென்வடல் ரோட்டிற்கு மேற்கே ஒரு வில்லை வீடு உள்ளது என்றாலும், அதில் 10 ஆம் பிரதிவாதியும், அவரது மகன் 12 ஆம் பிரதிவாதியும் குடியிருந்து வருகிறார்கள் என்றால் பொதுவான வீட்டில் குடியிருந்து வருகிறார்கள். சர்வே எண் தெரியவில்லை. மேற்படி வில்லை வீட்டினை இந்த வழக்கில் சொத்து விபரத்தில் சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்தில் வெள்ளார்நாயக்கன்பாளையத்தில் வீடு இல்லை என்றால் தனியாக பட்டா நிலத்தில் உள்ளது. எனக்கு வெள்ளார்நாயக்கன்பாளையத்தில் வீடு இல்லை என்றாலும், அங்கு குடியிருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானும், என்னுடைய சகோதரர்கள் பெருமாள், வீரப்பன், மற்றும் தாயார் கந்தாயம்மாள் ஆகியோர் சேர்ந்து சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 131/2007 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கின் பிராது நகல் என்றால் ஆமாம். அசல் வழக்கு எண். 131/2007 பிராது சார்வு நகல் 10 முதல் 12 பிரதிவாதிகள் பி.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்யப்படுகிறது. மேற்படி பிராது நகலில் சொத்து விபரத்தில் சர்வே எண். 308/2-க்கு செக்குபந்தி காட்டப்பட்டு சொத்து விபரம் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஏற்கனவே என்னுடைய தகப்பனாருக்கும், சித்தப்பாவுக்கும் இடையே பாகம் ஏற்பட்டு விட்டதால்தான் அவ்வாறு செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றாலும், நான் தற்போது கோரியுள்ள பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. 5 ஆம் பிரதிவாதி ஈஸ்வரி ஈரோடு மாவட்டம், சிங்கம்பேட்டை கிராமம், காட்டூரில் குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். 1 ஆம் பிரதிவாதி கிராம குல வழக்கப்படி 5 ஆம் பிரதிவாதியை விவாகரத்து செய்துள்ளார் என்றால் அவ்வாறு இல்லை. 1 ஆம் பிரதிவாதி 5 ஆம் பிரதிவாதியை விவாகரத்து செய்து விட்டார் என்றாலும், நான் வெளியூரில் இருப்பதால் அந்த விபரம் எனக்கு தெரிய வரவில்லை என்றாலும்

சரியல்ல. 1ஆம் பிரதிவாதிக்குரிய பாகத்தை 10 முதல் 12 பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும், அதில் 5 மற்றும் 6ஆம் பிரதிவாதிகளுக்கு அதில் எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல. பொதுவாகத்தான் அனுபவித்து வருகிறார்கள். 1988ல் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 664/1988லேயே சொத்து விவரத்தில் செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றாலும், பாகப்பிரிவினை ஏற்பட்டதால்தான் செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. என் தாயார் வயதானவர் என்பதால் விவரம் தெரியாமல் அவ்வாறு காட்டியுள்ளார். பாகம் ஏற்பட்டதாலும், தனிப்பட்ட சுவாதீனத்தில் இருந்து வந்ததாலும்தான் தனியாக செக்குபந்தி காட்டப்பட்டுள்ளது என்றாலும், என்னுடைய தாயார் வயதானவர் என்பதால் விவரம் தெரியாமல் காட்டியுள்ளார் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனவே அசல் வழக்கினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

Sd/- K. Abimanyu,

Sd/- M. Mekala Mythili,
Sub Judge, Sankari.